09.03.2026

O.S.No.451/2011

DW1-கணேசன்–த/பெ.திருமலையாண்டி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 09.03.2026

குறுக்கு விசாரணை : ( வாதி தரப்பில்)

1. நான் இந்த வழக்கில் தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது எனக் காட்டக்கூடிய ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. அ.வ.64/2003 வழக்கில் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டது மற்றும் அதன் தீர்ப்புரை வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

3. தபசில் சொத்தை நான் அனுபவம் செய்வதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் முன் வழக்கில் தீர்வை ரசீது தாக்கல் செய்துள்ளேன்.

4. நான் இந்த வழக்கில் அனைத்து பிரதிவாதிகளுக்காகவும் வழக்கு நடத்துகிறேன் என்றால் சரிதான்.

5. சொக்கம்பட்டியில் நான் வசிக்கிறேன் என்பதை நிரூபிக்க என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் தற்போது தென்காசியில் வசித்து வருகிறேன்.

6. அ.வ.64/2003 வழக்கில் நாங்கள் கட்சி செய்யும் போது நானும், என் தாயார், சகோதரர்கள் T.N. புதுக்குடி கிராமத்தில் வசித்தோம் என்றால் சரியல்ல என் சகோதரர் மட்டும் வசித்து வந்தார்.

7. நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றும் அ.வ.64/2003 வழக்கில் என் தாயார் மற்றும் சகோதரருக்கு T.N.புதுக்குடி விலாசத்தில் தான் சம்மன் சார்பாகியது என்றால் அந்த வழக்கில் நாங்கள் வாதிகள். இந்த வழக்கில் நாங்கள் T.N.புதுக்குடி விலாசத்திற்கு தான் அழைப்பாணை வந்தது.

8. சொக்கம்பட்டி கிராமத்தில் நான் வசிப்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யாததால் தபசில் சொத்தில் எனக்கு எந்த அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல.

9. நான் எந்த கதவு இலக்கத்தில் வசிக்கிறேன் என்ற விவரங்கள் முதல் விசாரணையில் குறிப்பிடாததால் நான் சொக்கம்பட்டி விலாசத்தில் வசிப்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யாததால் தபசில் சொத்தின் அனுபவம் என் வசம் இல்லை என்றால் சரியல்ல.

10. அ.வ.64/2003 வழக்கில் எனக்கு 3.1/4 சென்ட் மட்டுமே பாத்தியம் என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல 7.78 சென்ட் உள்ளது.

11. என்னிடம் காண்பிக்கப்படுவது அ.வ.64/2003 வழக்கின் தீர்ப்பு என்றால் எனக்கு கண்பார்வை சரியாகத் தெரியாது.

12. வா.சா.ஆ.5 ன் படி அ.வ.64/2003 ன் தீர்ப்புரையின் படி எனக்கு கிழமேல் தச்சுமுளம் 20, தென்வடல் தச்சுமுளம் 10 ஆகியவை மட்டுமே பாத்தியம் என்றால் சரியல்ல. எனக்கு பத்திரப்படி 7.78 சென்ட் பாத்தியம்.

13. என் ஆவணத்திற்கு மாறாகவும், அ.வ.64/2003 வழக்கிற்கு முரணாகவும் சாட்சியம் அளிப்பதால் என் சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

14. இவ்வழக்கின் வாதிகளும், அ.வ.64/2003 வழக்கின் பிரதிவாதிகளும் 2 வழக்கு நடக்கும் போது வெளியூரில் தான் குடியிருந்தார்கள் என்றால் சரியல்ல உள்ளூரில் குடியிருந்தார்கள்.

15. என் நிரூபண வாக்குமூலத்தின் 7 வது பத்தியில் கூறிய சங்கதிகள் உண்மையா? இல்லையா? என்றால் உண்மை இல்லை.

16. நானும் மற்ற பிரதிவாதிகளும் ஏற்கனவே மோசடியான தீர்ப்பு பெற்று அதன் அடிப்படையில் வாதிகளின் உரிமையை பறிக்கிறோம் என்றால் சரியல்ல.

17. நான் வாதிகள் மீது தாக்கல் செய்த முன் வழக்கின் விவரம் தெரியாது என்றும் தற்போது தான் தெரியும் என்றால் சரியல்ல.

18. அ.வ.64/2003 வழக்கின் சொத்து விவரம் மற்றும் விஸ்தீரணம் இந்த வழக்கின் சொத்து விவரம் மற்றும் விஸ்தீரணம் முரண்பாடாக உள்ளதாலும் தரப்பினர்களும் வேறுபடுவதாலும் முன் வழக்கின் தீர்ப்பு இந்த வழக்கை கட்டுபடுத்தாது என்றால் சரியல்ல.

19. தாவா சொத்தில் கிணறு எந்த பக்கத்தில் உள்ளது என்றால் வடபக்கம் உள்ளது.

20. இந்த வழக்கில் ஆணையர் கீழ்பக்கத்தில் கிணறு உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அது தவறு.

21. இந்த வழக்கில் எனக்கு என்ன கட்சி என்றால் ஏற்கனவே ஒரு வழக்கு முடிந்ததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல.

22. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை.

23. தபசில் சொத்தில் மொத்த விஸ்தீரணமான 7.78 சென்டில் அ.வ.64/2003 வழக்கில் 3.1/4 சென்ட் மட்டுமே எனக்கு பாத்தியப்பட்டதாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதால் மீதமுள்ள சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

24. தபசில் சொத்தைப் பொறுத்து எனக்கு அனுபவமும், உரிமையும் இல்லை என்றும் ஏற்கனவே வாங்கிய மோசடியான தீர்ப்பை வைத்து நான் தவறான கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல

25. தபசில் சொத்தின் அனுபவம் வாதிகள் வசமே உள்ளது என்றும் வாதி சொத்தின் உரிமையாளர் என்பதால் வாதியின் வழக்கை அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>

இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC)
தென்காசி